**கவனிக்க.**- 2026.03.06 ஆந் திகதிய 2479 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

**கவனிக்க.**- இவ்வார வர்த்தமானியின் பகுதி VI இன் 2026 ஆம் ஆண்டின் கொழும்பு மாவட்டத்துக்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம் பிரசுரிக்கப்படுகின்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2480 - 2026 මාර්තු මස 13 වැනි සිකුරාදා - 2026.03.13

2480 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 604 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 605 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, மாச்சு மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## திருத்தம்

### அரசாங்க சேவை ஆணைக்குழு

### இலங்கை பொறியியல் சேவையின் தரம் III இற்கு உத்தியோகத்தர்களை மட்டுப்படுத்தப்பட்ட அடிப் படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026 (2024(II)

2026, சனவரி மாதம் 30 ஆந் திகதிய 2474 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி ஆட்சேர்ப்புச் செய்யப்படும் அறிவித்தலின் விண்ணப்பப்படிவங்களை கோரும் அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

- ❖ (அ) விண்ணப்பப்படிவங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2026.04.10 ஆகும். (இருப்பினும், தாபன ரீதியான விடயங்கள் அல்லது தபால் தாமதங்கள் காரணமாக 2026.04.24 ஆந் திகதி வரை பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பொது நிர்வாகப் பிரிவிற்கு கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். எனினும், அன்றைய தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் எவ்விதக் காரணமுமின்றி நிராகரிக்கப்படும்.)
- ❖ (ஆ) 2026.03.03 ஆந் திகதிக்கு பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கு அவசியமான அனைத்துத் தகைமைகள் மற்றும் நிபந்தனைகள் ஒவ்வொரு வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
- ❖ மேற்படி விடயங்கள் தவிர்ந்த 2026, சனவரி மாதம் 30 ஆம் திகதிய 2474 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஏனைய விடயங்கள் தொடர்ந்தும் மாற்றமின்றி நிலவும்.

02. இவ் வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி உரைப் பகுதிகளுக்கு இடையில் ஏதேனும் இணக்கப்பாடின்மைகள் அல்லது ஏதாவது முரண்பாடுகள் ஏற்படுமாயின், அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான உரை பயன்வலுப் பெற வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

எஸ். ஆலோக்கபண்டார,
செயலாளர்,
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2026, மாச்சு 09.

03-202

## அரசியலமைப்பு பேரவை

### பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கான உறுப்பினர் ஒருவரை நியமித்தல்

அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் பகிரங்க சேவை ஆணைக்குழு ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அவர்களில் குறைந்தது மூன்று உறுப்பினர்கள் அரசியலமைப்பின் உறுப்புரை 54(2) மற்றும் (3) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, பகிரங்க அலுவலராக பதினைந்தாண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 41 (ஆ) ஆம் உறுப்புரையின் கீழ் பகிரங்க சேவை ஆணைக்குழுவில் உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆர்வம் காட்டும் தனிநபர்களிடமிருந்து அரசியலமைப்புப் பேரவையினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

www.parliament.lk எனும் இலங்கைப் பாராளுமன்ற இணையத்தளத்தில் "பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கான உறுப்பினர் பதவிக்கான நியமனம்" என்ற துரித இணைப்பில் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு, முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் :

அரசியலமைப்புப் பேரவைக்கான பதில் செயலாளர் நாயகம்,
அரசியலமைப்புப் பேரவை-அலுவலகம்,
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயர்த்தனபுர கோட்டே.

எனும் முகவரிக்கு, 2026, மாச்சு 27 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயமாக "பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கான உறுப்பினர் ஒருவரை நியமித்தல்" எனக் குறிப்பிடவும்.

அரசியலமைப்புப் பேரவையின் கட்டளையின் பேரில் வெளியிடப்பட்டது.

அரசியலமைப்புப் பேரவைக்கான பதில் செயலாளர் நாயகம்,
அரசியலமைப்புப் பேரவை-அலுவலகம்,
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயர்த்தனபுர கோட்டே,
2026.03.12.

03-387

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு

### தொழில் நியாய சபைகள் செயலாளர் அலுவலகத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராத பல்நோக்கு பிரிவு I சேவை வகுதிக்கு உரிய தொழில் நியாய சபைகளின் உரைபெயர்ப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் (திறந்த) - 2026

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் கீழ் உள்ள தொழில் நியாய சபைகள் அலுவலகங்களில் வெற்றிடங்கள் நிலவுகின்ற உரைபெயர்ப்பாளர் சிங்களம்/ தமிழ் மொழிக்கான 06 பதவிகள், சிங்களம்/ஆங்கிலம் மொழிக்கான 03 பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்த இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி படிவத்தின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன் "செயலாளர், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு, இல. 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மூலையில் "தொழில் நியாய சபைகள் செயலாளர் அலுவலகத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராத - பல்நோக்கு பிரிவு I சேவை வகுதிக்கு உரிய தொழில் நியாய சபைகளின் உரைபெயர்ப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் (திறந்த) - 2026" என தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2026.04.13 ஆம் திகதியாகும்.

**குறிப்பு** - விண்ணப்பமொன்று அல்லது அதனுடன் தொடர்புபட்ட ஆவணமொன்று தபாலில் காணாமற் போனதாக அல்லது தாமதமடைந்ததாக செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் கவனததிற் கொள்ளப்படமாட்டாது.

01. **சேவையில் அமர்த்தப்படும் நிபந்தனைகள் :**

I. இந்நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதிய முடையதுமாகும். (ஓய்வூதிய முறை தொடர்பில் அரசாங்கத்தின் எதிர்கால கொள்கைசார் தீர்மானத்திற்கு உட்பட்டதாகும்.)

II. இந்த நியமனம் பெறும் ஒரு அதிகாரி 03 வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுவதுடன், குறித்த காலப்பகுதியினுள் முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்.

III. 18/2020 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின்படி மொழி தொடர்பான தேர்ச்சி மட்டத்தினை 5 வருட காலத்தினுள் பெறுதல் வேண்டும். அரசகரும மொழியற்ற மொழியில் சேவையில் இணைந்த அதிகாரிகளினால் 03 வருடத்தினுள் ஓர் அரசகரும மொழியில் தேர்ச்சியை பெறவேண்டியதுடன், ஏனைய அரசகரும மொழி தொடர்பான தேர்ச்சியை 05 வருட காலப்பகுதியினுள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

IV. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசாங்க நிதி ஒழுங்கு முறைகளுக்கும் திணைக்களம்சார் ஏனைய உத்தரவுகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டதாகும்.

02. ஆட்சேர்ப்பு செய்யும் தரம் - தரம் III

03. **சம்பள அளவுத்திட்டம்** :
இந்தப் பதவி பொது நிருவாக சுற்றறிக்கை 10/2025 ஆம் இலக்க சம்பள சுற்றறிக்கையின்படி MN 02-2025 ரூபா 48,470.00-10 x 540 - 11 x 630 - 10 x 1,010 - 10 x 1,190 - ரூபா 82,800.00 (மாதாந்த) சம்பளம் அளவு உரித்துடையதாகும். தர முறையுடன் தொடர்பான ஆரம்ப சம்பள அளவு ரூபா 48,470.00 ஆகும்.

04. **தகைமைகள் :**

I. **கல்வித்தகைமைகள் :**

(அ) கல்விப் பொதுத்தராதர (சா.த.) பரீட்சையில் கணிதம் மற்றும் உரை பெயர்ப்புடன் தொடர்பான இரண்டு மொழிகள் உள்ளிட்ட 04 பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் ஒரே முறையில் ஆறு பாடங்களில் (06) சித்திபெற்றிருத்தல்;

மற்றும்

(ஆ) கல்விப் பொதுத்தராதர (உயர் தர) பரீட்சையில் மூன்று பாடங்களிலும் (பொது அறிவு பரீட்சை தவிர்ந்த) ஒரே முறையில் சித்தி பெற்றிருத்தல். (பழைய பாடத்திட்டத்தின் கீழ் 03 பாடங்களிலும் ஒரே முறையில் சித்தி பெற்றிருத்தல் போதுமானதாகும்.)

05. **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு 18 வருடங்களுக்கு குறையாதும் 30 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

06. **உடற் தகைமைகள் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் பதவியின் கடமைகளைச் செய்யவும் உடல் மற்றும் உள ரீதியான தகைமை பெற்றவராக இருத்தல் வேண்டும்.

07. **வேறு தகைமைகள் :**

i. விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையொருவராக இருக்க வேண்டும்;

ii. விண்ணப்பதாரிகள் சிறந்த குணநலன் கொண்டவராக இருக்க வேண்டும்;

iii. இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அனைத்துத் தகைமைகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். இறுதித் திகதிக்கு அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

08. **ஆட்சேர்ப்பு முறை :**

8.1 **எழுத்துப் பரீட்சை :**

நீதிமற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் நடாத்தப் படும் எழுத்துப் பரீட்சை மூலம் புள்ளிகள் வழங்கப்படும்.

**எழுத்துப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கும் முறை** :

| | *பாடங்கள்* | *காலம்* | *அதிகபட்ச புள்ளி அளவு* | *சித்தி பெறுவதற்கான புள்ளி அளவு* |
|---|---|---|---|---|
| 01 | சிங்களம்/தமிழ் மொழிபெயர்ப்பு | 1 மணித்தியாலம் | 100 | 40% |
| 02 | சிங்களம்/ஆங்கிலம் மொழிபெயர்ப்பு | 1 மணித்தியாலம் | 100 | 40% |

**பரீட்சைக்கான பாடத்திட்டம்** :

| | *பாடம்* | *பாடத்திட்டத்தின்* |
|---|---|---|
| 01 | சிங்களம்/தமிழ் மொழிபெயர்ப்பு | சிங்கள உரை அல்லது உரைகள் தமிழ் மொழிக்கும் தமிழ் உரை அல்லது உரைகள் சிங்கள மொழிக்கும் மொழிபெயர்த்தல் |
| 02 | சிங்களம்/ஆங்கிலம் மொழிபெயர்ப்பு | சிங்கள உரை அல்லது உரைகளை ஆங்கில மொழிக்கும் ஆங்கில உரை அல்லது உரைகளை சிங்கள மொழிக்கும் மொழிபெயர்த்தல் |

**குறிப்பு** : பரீட்சையில் விண்ணப்பதாரர்கள் பொருந்தக்கூடிய இரண்டு பாடங்களில் ஏதேனும் ஒன்றுக்கு தோற்ற முடியும். எழுத்துப் பரீட்சை சித்திபெற்ற விண்ணப்பதாரர்களுள் வெற்றிட எண்ணிக்கையின் இரு மடங்கினர் தொழில்முறை பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

8.2 **தொழில்முறைப் பரீட்சை :**

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் தேர்வுக்குழுவினால் புள்ளி வழங்கப் படும். தொழில்முறைப் பரீட்சையில் மொழியை வாய்மொழி ரீதியில் மொழிபெயர்க்கும் திறன் அளவிடப்படும்.

**தொழில்முறைப் பரீட்சையில் புள்ளி வழங்கும் முறை** :

| | *பாடத்துறை* | *காலம்* | *அதிகபட்ச புள்ளி அளவு* | *சித்தி பெறுவதற்கான புள்ளி அளவு* |
|---|---|---|---|---|
| 01 | சிங்களம்/தமிழ் அல்லது சிங்களம்/ஆங்கிலம் மொழிபெயர்ப்பு | 30 நிமிடம் | 100 | 40% |

**பரீட்சைக்கான பாடத்திட்டம்** :

| | *பாடம்* | *பாடத்திட்டத்தின்* |
|---|---|---|
| 01 | சிங்களம்/தமிழ் அல்லது சிங்களம்/ஆங்கிலம் மொழிபெயர்ப்பு | சிங்களம், தமிழ் மொழிக்கும் தமிழ், சிங்கள மொழிக்கு மொழிபெயர்த்தல்/ அல்லது சிங்களம், ஆங்கில மொழிக்கும் மொழிபெயர்த்தல். |

8.3 **பொது நேர்முகப்பரீட்சை :**

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினால் தகைமைகள் பரீட்சிக்கப் படும் (புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.)

**குறிப்பு** : எழுத்துப் பரீட்சை மற்றும் தொழில்முறை பரீட்சை ஆகிய இரண்டிலும் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் தகுதி வரிசையின்படி விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

09. விண்ணப்பப்படிவம் 22-29cm அளவிலான A4 தாளில் தயாரிக்கப்பட வேண்டும். மேலும் 01-09 வரையான தலைப்புகள் முதல் பக்கத்திலும், 10-14 வரையான தலைப்புகள் இரண்டாவது பக்கத்திலும், 15-17 வரையான தலைப்புகள் மூன்றாம் பக்கத்திலும் மீதமுள்ள தலைப்புகள் நான்காவது பக்கத்திலும் இருக்க வேண்டும். தொடர்புடைய தகவல்கள் சரியாகவும் தெளிவாகவும் உள்ளிடப்பட வேண்டும். எந்த வகையிலும் பூரணமடையாத அடிப்படைத் தகுதிகள் அற்ற, உரிய திகதிக்கு பின்னர் பெறப்பட்ட மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் இணங்காத விண்ணப்பங்கள் அறிவிப்பு இன்றி நிராகரிக்கப்படும். இந்த தொடர்புடைய விண்ணப்பப் படிவத்தின் பிரதி ஒன்றை வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். மேலும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் அறிவித்தலின் மாதிரி விண்ணப்பப் படிவத்துடன் இணங்குகிறதா என்பதை விண்ணப்பதாரர் சரிபார்க்க வேண்டும். விண்ணப்பம் இத்தோடு இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பங்கள் பெறப்பட்டமை தொடர்பில் அறியத்தரப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை தாமதப்படுத்துவதால் ஏற்படக்கூடிய எந்தவொரு இழப்புகளையும் விண்ணப்பதாரர்களே ஏற்க வேண்டும்.

**கவனிக்கப்பட வேண்டும் :**

கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் ஆவணங்களை சமர்ப் பிக்கத் தவறும் பரீட்சார்த்தியின் விண்ணப்பங்கள் பற்றி கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

அரசாங்க சேவை/ மாகாண அரசாங்க சேவை/ அரசாங்க கூட்டுத்தாபனங்களில் பணியாற்றும் அதிகாரிகள் தங்களது திணைக்கள/ நிறுவனத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

10. **பரீட்சைக் கட்டணம்** :

சகல விண்ணப்பதாரர்களும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 2,700.00 இனை மக்கள் வங்கியின் மத்திய நகர கிளையின் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் செயலாளரின் பெயரில் 176-1001-9-9025184 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைத்தல் வேண்டும். குறித்த பற்றுச்சீட்டின் மூலம் பிரதியை விண்ணப்பப்படிவத்துடன் பரிந்துரைக்கப்பட்ட இடத்தில் இணைத்து அனுப்ப வேண்டும்.

11. விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். எந்தவொரு நிறுவனத்திலிருந்தும் பரீட்சைக்கு விணணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தங்களது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பதாரிகள் தங்களது கையொப்பத்தை அரசாங்க பாடசாலை அதிபர்/ ஓய்வுபெற்ற அதிகாரி ஒருவர், பிரிவின் கிராம அலுவலர் ஒருவர், சமாதான நீதவான் ஒருவர், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவர், சட்டத்தரணி ஒருவர், பகிரங்க நொத்தாரிசு ஒருவர், முப்படையின் அதிகாரமிக்க அதிகாரி ஒருவர், அரசாங்க அல்லது மாகாண சேவையின் அல்லது நிரந்தர பதவிநிலை அதிகாரி ஒருவர் அல்லது பௌத்த விகாரையின் தலைமை தேரர் அல்லது வணக்கத்துக்குரிய தேரர் அல்லது வேறு மதத்தின் வழிபாட்டு தளத்திற்குப் பொறுப்பானவர் அல்லது மதகுருமார்களுள் குறிப்பிடத்தக்க பதவியை வகிக்கும் நபர் ஆகிய ஒருவரால் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

12. நியமனம் அமுல்படுத்தப்படும் திகதியானது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தரவுக்கு இணங்க நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

13. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், அரசாங்க சேவை தொடர்பில் அவ்வப்போது வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை மற்றும் தொழில் நியாய சபைகள் செயலாளர் அலுவலகத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராத - பல்நோக்கு பிரிவு I சேவை வகுதிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின் நிபந்தனைகள் இந்தப் பதவிக்குப் பொருந்தும்.

14. சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப் பட்ட இந்த அறிவித்தலில் மொழி உரைகளுள் ஏதேனும் முரண்பாடு ஏற்பட்டால் சிங்கள மொழியிலான உரையினை சரியானதாக கருதப்படும்.

சனாதிபதி சட்டத்தரணி அயெஷா ஜினசேன
செயலாளர்,
நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு.

இல. 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
கொழும்பு 10,
2026, பெப்புருவரி 27.

| |
|---|
| இல. ..................................... (அலுவலக உபயோகத்துக்காக) |
| மொழிமூலம் |
| சிங்களம்/ தமிழ் ☐ |
| சிங்களம்/ ஆங்கிலம் ☐ |
| (பொருத்தமான பெட்டியில் குறிக்கவும்) |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு**

தொழில் நியாய சபைகள் செயலாளர் அலுவலகத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராத பல்நோக்கு பிரிவு I சேவை வகுதிக்கு உரிய தொழில் நியாய சபைகள் உரைபெயர்ப்பாளருக்கான விண்ணப்பம்

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :

.............................................................................................................................................

முதலெழுத்துக்களுடன் பெயர் ( ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :

.............................................................................................................................................

(ஆ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :

.............................................................................................................................................

முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :

.............................................................................................................................................

02. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :

.............................................................................................................................................

03. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :

.............................................................................................................................................

04. தபால் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :

(நிரந்தர முகவரி மாறுபடுமாயின் மாத்திரம் பூரணப்படுத்தவும்.)

.............................................................................................................................................

05. மின்னஞ்சல் முகவரி : .............................................................................................................................

06. தொலைபேசி இல. (தனியார்) : ...............................................(நிலையான) - ..................................................................

(கட்டாயம் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிடவும்.)

07. தேசிய ஆளடையாள அட்டை இல. : ..............................................................................................................

08. ஆண்/ பெண் நிலை :.........................................................................................................................

09. பிறந்த திகதி : வருடம் :................................. மாதம் : .................................... திகதி : ................................................

10. விண்ணப்பம் ஏற்கப்படுகின்ற இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் :........................ மாதங்கள் : ................................................ நாட்கள் :..........................

11. இனம் : ........................................................................................................................................................

12. விவாகமானவரா/ விவாகமாகாதவரா? :.......................................................................................................

13. க. பொ. த. (உயர்தர) பரீட்சை :

வருடம் ......................................................... பரீட்சை சுட்டெண் : ........................................

| *தொடர் இல.* | *பாடம்* | *பெறுபேறு* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

14. க. பொ. த. (சா.த.) பரீட்சை :

| *தொடர் இல.* | *பாடம்* | *முதல் முறை* | *இரண்டாவது முறை* | *மூன்றாவது முறை* |
|---|---|---|---|---|
| | | *வருடம் ...........<br>பரீட்சை சுட்டெண் ............................* | *வருடம் ...........<br>பரீட்சை சுட்டெண் ............................* | *வருடம் ...........<br>பரீட்சை சுட்டெண் ............................* |
| | | *பெறுபேறு* | *பெறுபேறு* | *பெறுபேறு* |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

15. வேறு கல்வித் தகைமைகள் :......................................................................................................................
......................................................................................................................................................
......................................................................................................................................................
......................................................................................................................................................

16. மொழித் தேர்ச்சி (ஏற்புடைய வரியில் ✓ குறியீட்டை இடவும்)

| | *மிக நன்று* | *நன்று* | *சாதாரணம்* | *பலவீனம்* |
|---|---|---|---|---|
| சிங்களம் | | | | |
| தமிழ் | | | | |
| ஆங்கிலம் | | | | |

17. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும்.

| |
|---|
| |

**விண்ணப்பதாரரின் சான்றிதழ்**

.................................................................................................................. ஆகிய நான், இங்கு குறிப்பிட்டுள்ள சகல விடயங்களும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் தெரிவிக்கிறேன். நான் அரசாங்க சேவையில் பணிநீக்கம் செய்யப்பட்டோ அல்லது நான் எந்த காரணத்திற்காகவும் கருணையுடன் கூடிய மாற்றாகவோ வினைத்திறன் இன்மை மீது சேவையில் இருந்து ஓய்வு பெறவோ இல்லை என்றும், பதவி விலகியவராக கருதப்படவோ இல்லை என்றும் உறுதிப்படுத்துகிறேன். இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள சகல விடயங்களும் உண்மையற்றது அல்லது தவறானது என நிரூபணமாகினால் பதவிக்கு தெரிவுசெய்ய முன்னராயின் நான் தகுதியற்றவராவதுடன் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து எந்த நட்டஈடும் செலுத்தப்படாது பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு கீழ்ப்படிய வேண்டும் என்பதையும் நான் அறிவேன்.

திகதி : ..............................................

.................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்**

இவ்விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பித்துள்ள ...................................................................... திரு./ திருமதி/ செல்வி என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் தெரிந்தவர் என்றும் அவர் என் முன்னிலையில் ............. ஆம் திகதி அவருடைய கையொப்பத்தினை இட்டதாகவும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி உள்ளதாகவும், குறித்த பற்றுச்சீட்டினை ஒட்டியுள்ளதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.
(*தேவையற்றதை வெட்டி விடவும்)

திகதி : ..............................................

.................................................
கையொப்பத்தை உறுதிப்படுத்திய
அதிகாரியின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்)

உறுதிப்படுத்திய அதிகாரியின் பெயர் : ..............................................
பதவி : ..............................................
முகவரி : ..............................................

**விண்ணப்பதாரி மத்திய அல்லது மாகாண அரசாங்க சேவையின் அதிகாரி ஒருவராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

..................................................................... திரு./ திருமதி/ செல்வி இன் விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பிக்கின்றேன். அவர் இந்த அமைச்சின்/ திணைக்களத்தின் நிரந்தர/ தற்காலிக/ பயிலுநர்/ அமைய அதிகாரி ஒருவராக சேவையாற்றுவதாகவும், இந்தப் பதவிக்காக தெரிவு செய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க ஒருவராக சேவையாற்றுவதற்காகவும் இந்தப் பதவிக்காக தெரிவு செய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்றும் தெரிவிக்கிறேன்.
(*தேவையற்றதை வெட்டி விடவும்)

.................................................
திணைக்களத் தலைவர்
அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி.
(உத்தியோகபூர்வ முத்திரை)

திகதி : ..............................................
பெயர் : ..............................................
பதவி : ..............................................
அமைச்சு/ திணைக்களம் : ..............................................

03-107

## தேசிய சுவடிக்கூடத் திணைக்களம்

## தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்துடன் தொடர்புடைய உத்தியோகத்தர் சேவை வகுதியின் ஆவணக் காப்பக உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்தின் தொடர்புடைய உத்தியோகத்தர் சேவை வகுதியின் ஆவணக் காப்பக உத்தி யோகத்தர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகுதியுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. இப்பரீட்சையின் மூலம் தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்துடன் தொடர்புடைய உத்தியோகத்தர் சேவை வகுதியின் ஆவணக் காப்பக உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள். விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2026, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதியாகும்.

02. **சேவை நிபந்தனைகள்:**

(அ) அரசாங்க சேவையின் நியமனங்களை நிர்வகிக்கும் பொதுவான நிபந்தனைகளுக்கும், 2018.07.12 ஆந் திகதிய பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அந்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதனகத்து மேற்கொள்ளப்படவுள்ள அல்லது திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கும் கட்டுப்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்தி ஆவணக் காப்பக உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்படுவார்.

(ஆ) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித் துடையதுமாகும். இந்த பதவி ஓய்வூதியத்துடன் கூடியது எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், எதிர்வரும் காலங்களில் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள உத்தியோகத்தர்களின் ஓய்வூதியத் திட்டம் குறித்து அரசாங்கத்தினால் தொடர்ந் தேர்ச்சையாக எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கும் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றுக்கும் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் விதத்தில் நீர் அதற்கான பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும்.

(இ) இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். தொடர்புடைய உத்தியோகத்தர் சேவை வகுதியின் ஆவணக் காப்பக உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 03 வருடங்களினுள் ஆட்சேர்ப்பு நடைமுறை ஒழுங்கில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாம் வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

(ஈ) தமக்கு வழங்கப்படும் பதவிக்கு உரித்தான கடமையை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறும் பட்சத்தில் அவ்விண்ணப்பதாரிகளின் நியமனங்கள் இரத்துச் செய்வதற்கு தேசிய சுவடிகள் கூட பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரமுண்டு.

(உ) பதவிக்கு ஒதுக்கப்பட்ட கடமைகள்

| *அங்கீகரிக்கப் பட்ட பதவிகள்* | *பதவிகள் அங்கீகரிக்கப் பட்டுள்ள தரம்* | *அங்கீகரிக்கப் பட்ட பதவிகளின் எண்ணிக்கை* | *பணிகள்* |
|---|---|---|---|
| ஆவணக் காப்பக உத்தியோகத்தர் | III, II, I | 45 | அரசாங்க மற்றும் தனியாரின் பதிவுகளை ஆய்வு செய்வதற்கு உதவி வழங்குதல்; அரசாங்க மற்றும் தனியார் துறை பதிவுகளைச் சேகரிப்பதற்கான பட்டியல்கள் மற்றும் அட்டவணைகளைத் தயாரித்தல்; முதன்மைப் பட்டியல்களைத் தயாரித்தல்; நீதிமன்றங்களின் முன் சமர்ப்பணங்களை முன்வைத்தல்; பொதுமக்கள் தொடர்பாடல் கடமைகள்; பதிவுகள் தொடர்பான விசாரணைகளைக் கையாளுதல் மற்றும் ஆராய்ச்சி அறையை மேற்பார்வை செய்தல், கண்காட்சிகளுக்கு ஆதரவு வழங்குதல்; பதிவுகளின் பௌதிகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், நூலகக் கடமைகள், காப்பக ஆவணங்களுக்கான வகைப்படுத்தல் மற்றும் சுட்டிகளைத் (சூசிகைகளை) தயாரித்தல் மற்றும் அவற்றை வைப்புச் செய்தல், இலத்திரனியல் ஊடகங்களிலுள்ள பதிவுகளுக்கான வழிகாட்டித் தேடல்களை உருவாக்குதல்; காப்பக ஆவணங்களுக்கு இலக்கங்களை ஒதுக்கீடு செய்தல் மற்றும் அவற்றை வைப்பிலிடல்; பதிவுகளை டிஜிட்டல்மயமாக்கல் தொடர்பான விடயங்களைக் கையாளுதல்; ஆராய்ச்சிப் பணிகளுக்காக வருகை தரும் பொதுமக்களுக்கு உதவி வழங்குதல்; காப்பக ஆவணங்கள் தொடர்பான ஆராய்ச்சிகளை வெளியிடுதல்; பதிவுகளைப் பதிப்பிப்பதற்கும் அச்சிடுவதற்கும் உதவி வழங்குதல்; காப்பக ஆவணங்கள் முறையாக வைப்பிலிடப்படுவதை உறுதிப்படுத்துவதற்குப் பரிசோதித்தல்; ஆவணக் களஞ்சியத்தை மேற்பார்வை செய்யும் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு நிருவாக ரீதியான உதவிகளை வழங்குதல்; திணைக்களத்தின் நிதி மற்றும் பௌதிகப் பணிகளுக்கு உதவி வழங்குதல் மற்றும் அத்தகைய பணிகளின் முன்னேற்ற மீளாய்வுகளை மேற்கொள்வதற்கு உதவி வழங்குதல்; தொழில்சார் கோப்புகளைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்; அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல்; இ-அரசாங்க சேவைகளை முன்னெடுத்தல்; மேற்பார்வை உத்தியோகத்தர் மற்றும் தேசிய ஆவணக்காப்பக பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகளை நிறைவேற்றுதல். |

03. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்** :

பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் படி, தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்தின் தொடர்புடைய உத்தியோகத்தர் சேவை வகுதியின் ஆவணக் காப்பக உத்தியோகத்தர் தரம் III இற்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் MN 04 - 2025 ரூபா 53,060–10x800–11x1190–10x1320–5 x1350- ரூபா 94,100.00 (ஆரம்ப சம்பளப் படிமுறை - ரூபா 53,060.00) ஆகும். இதற்கு மேலதிகமாக அரசாங்க ஊழியர்களுக்கு அரசினால் அவ்வப்போது செலுத்தப்படும் ஏனைய படிகளுக்கும் தாங்கள் உரித்துடையவராவீர்கள்.

04. **ஆட்சேர்ப்பிற்கான தகைமைகள்:**

(அ) **கல்வித் தகைமைகள்**:

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் கலைமாணி, நுண்கலைமாணி, கட்புலக் கலைமாணி, கல்விமாணி, சட்டத்தரணி அல்லது விஞ்ஞானமாணி பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தில் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது க.பொ.த (உயர்தர) பரீட்சையில் ஆங்கிலம் / பொது ஆங்கிலம் பாடத்தை ஒரு பாடமாகப் பயின்று சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது பட்டப் படிப்பினை ஆங்கில மொழி மூலமாகக் கற்றிருத்தல்.

(ஆ) **உடற் தகைமைகள்:**

எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கும், பதவிக்குரித்தான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் எல்லா வகையிலும் உடல் மற்றும் உள ரீதியாக தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(இ) **ஏனைய தகைமைகள்:**

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரிகள் சிறந்த நன்நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
III. க.வே. - விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு பதவியில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக அவசியப்படும் சகல தகைமைகள் மற்றும் நிபந்தனைகளையும் சகல வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஈ) **வயதெல்லை** :

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு இருபத்தியொரு (21) வயதுக்கு குறையாமலும் முப்பத்து ஐந்து (35) வயதினை விட மேற்படாதிருத்தலும் வேண்டும்.

05. **ஆட்சேர்ப்பு முறை :**

(அ) **எழுத்துப் பரீட்சை**

பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய மூன்று (03) வினாப் பத்திரங்களைக் கொண்டு எழுத்துப் பரீட்சை நடாத்தப்படும். ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைய பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய குறைந்தபட்ச புள்ளியின் அளவு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| *தொடரிலக்கம்* | *பாடம்* | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைய பெறவேண்டிய ஆகக் குறைந்தபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01. | **நுண்ணறிவுத் தேர்வு**<br>விண்ணப்பதாரரிடம் காணப்படும் தர்க்க ரீதியான வலிமை, மொழியியல் திறன், ஒப்பீட்டுத் திறன், எண்ணியல் திறன் மற்றும் அறிவார்ந்த வலிமை என்பவற்றை அளவிடும், எண்ணியல் மற்றும் படவடிவக் காட்சிகளைக் கொண்ட ஒரு வினாப்பத்திரமாகும். | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 02. | **கிரகித்தல்**<br>விண்ணப்பதாரரின் கிரகிக்கக்கூடிய ஆற்றல், பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளும் திறன், மாற்றீடுகளுக்குள் மிகவும் சரியான மாற்றீட்டைத் தெரிவுசெய்தல், ஒரு பந்தியின் அடிப்படை நோக்கங்கள் மற்றும் எண்ணக்கருக்களைப் புரிந்துகொள்ளுதல் என்பவற்றை அளவிடும் பல்தேர்வு வினாப்பத்திரமாகும். | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40 |

| *தொடரிலக்கம்* | *பாடம்* | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைய பெறவேண்டிய ஆகக் குறைந்தபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 03. | ஆங்கிலம்<br><br>விண்ணப்பதாரரிடம் காணப்படும் மொழி அறிவும், புரிந்துகொள்ளும் திறனும், மொழிபெயர்ப்புச் செய்யும் ஆற்றலும் என்பவற்றைச் சோதித்துப் பார்க்கும் ஒரு வினாப்பத்திரமாகும். | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40 |

பரீட்சார்த்திகள் சகல வினாப்பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டும் என்பதோடு அனைத்து வினாக்களுக்கும் ஒரு மொழியில் மாத்திரம் விடையளித்தல் வேண்டும்.

i. பரீட்சைப் பெறுபேறுகள் - விண்ணப்பதாரர்களுக்குப் பரீட்சைப் பெறுபேறுகளை அறிவித்தல், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தபால் மூலம் அறிவிக்கப்படும்.

(ஆ) தகுதி மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சை:

| *தொடரிலக்கம்* | *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள்* | *அதிபட்ச புள்ளிகள்* |
|---|---|---|
| 01. | **விடய அறிவு**<br><br>i. காப்பக ஆவணம் மற்றும் பதிவு முகாமைத்துவக் கோட்பாடுகள் பற்றிய அறிவு (10 புள்ளிகள்)<br>ii. தொடர்புடைய கொள்கைகள், தரநிலைகள் மற்றும் ஒழுக்கநெறிக் கோவை பற்றிய அறிவு (10 புள்ளிகள்)<br>iii. இலங்கையின் காப்பக ஆவணம் மற்றும் பதிவு முகாமைத்துவச் சட்டங்கள் பற்றிய அறிவு (10 புள்ளிகள்)<br>iv. டிஜிட்டல் பதிவு முகாமைத்துவம் பற்றிய அறிவு (10 புள்ளிகள்)<br>v. டிஜிட்டல் பதிவு பாதுகாப்பு மற்றும் அணுகல் பற்றிய அறிவு (10 புள்ளிகள்) | 50 |
| 02. | **மேலதிக கல்வித் தகைமைகள்**<br>i. காப்பக ஆவணம் மற்றும் பதிவு முகாமைத்துவத் துறையில் முதுமாணிப் பட்டங்கள் (15 புள்ளிகள்)<br>ii. முதுமாணிப் பட்டப் பாடநெறிகள் (வேறு எந்தவொரு பாடத் துறையிலும்) (10 புள்ளிகள்)<br>iii. டிப்ளோமா பாடநெறிகள்<br>- ஒரு மாதத்திற்கு மேற்பட்ட பாடநெறிகளுக்கு தலா 01 புள்ளி வீதம்<br>- மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட பாடநெறிகளுக்கு தலா 03 புள்ளிகள் வீதம்<br>- ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட பாடநெறிகளுக்கு தலா 05 புள்ளிகள் வீதம் | 25 |

| *தொடரிலக்கம்* | *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள்* | *அதிபட்ச புள்ளிகள்* |
|---|---|---|
| 03. | **மேலதிக தொழிற்துறைத் தகைமைகள்:**<br><br>i. காப்பக ஆவணம் மற்றும் பதிவு முகாமைத்துவம் தொடர் பாகப் பெற்றுக்கொண்ட தொழிற்துறை அனுபவங்கள்<br><br>- இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட – 08 புள்ளிகள்<br>- 01 -02 வருடங்களுக்கு இடையில் – 06 புள்ளிகள்<br>- 06 மாதங்களிலிருந்து 01 வருடம் வரை – 04 புள்ளிகள்<br>- 06 மாதங்களுக்கு குறைந்த – 02 புள்ளிகள்<br><br>ii. அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் காப்பக ஆவணம் மற்றும் பதிவு முகாமைத்துவம் தொடர்பாகப் பெற்றுக்கொண்ட பயிற்சிகளுக்காக<br><br>- 03 மாத காலப்பகுதிக்கு மேற்பட்ட – 06 புள்ளிகள்<br>- 01 – 03 மாதங்கள் வரை – 03 புள்ளிகள்<br>- 01 மாதத்திற்கு குறைந்த – 01 புள்ளி<br><br>iii. ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுப் பணிகள்<br><br>- ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்கு ஒரு கட்டுரைக்கு தலா 03 புள்ளிகள் வீதம்<br>- சஞ்சிகைக் கட்டுரைகள் அல்லது காப்பக ஆவண மற்றும் பதிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய வெளியீடுகளுக்கு ஒரு வெளியீட்டிற்கு தலா 02 புள்ளிகள் வீதம் | 20 |
| 04. | **நேர்முகப் பரீட்சையின் போது வெளிப்படுத்தப்பட்ட திறமை**<br>i. தொடர்பாடல் திறன் (02 புள்ளிகள்)<br>ii. குழுவாகச் செயல்படும் மற்றும் தலைமைத்துவத் திறன் (02 புள்ளிகள்)<br>iii. சேவை மீதான ஆர்வம் (01 புள்ளி) | 05 |
| | மொத்தம் | 100 |

i. தேசிய ஆவணக் காப்பக பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை சபையினால், விண்ணப்பத்தாரர்களின் விடய அறிவு, மேலதிக கல்வித் தகுதிகள், மேலதிக தொழில்சார் தகுதிகள் மற்றும் நேர்முகப் பரீட்சையின் போது வெளிப்படுத்தப்பட்ட திறமை என்பவற்றை அளவிடுவதற்காக மேலே குறிப்பிடப்பட்ட நடைமுறைக்கமைய தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும். அதில் பெற்றுக்கொள்ளக்கூடிய அதிகபட்ச புள்ளிகளின் எண்ணிக்கை நூறு (100) ஆகும்.

ii. எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் தகுதிக் கிரமத்திற்கமையவும், நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமையவும், வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இருமடங்கானவர்கள் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

**(இ) நியமனம் வழங்குதல் :**

i. வெற்றிடங்களின் எண்ணிக்கை 45 ஆகும். இவ்வெற்றிட எண்ணிக்கையில் 70% ஆனோர் திறந்த அடிப்படையின் கீழ் ஆட்சேர்க்கப்படவுள்ளனர். மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்க்கப்படவுள்ள 30% சதவீதத்திற்கான அடிப்படை தகைமையுடன் கூடிய விண்ணப்பதாரிகள் குறித்த திணைக்களத்தில் இல்லாதிருப்பின் மாத்திரம் எஞ்சிய அளவினர் திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் வெளிவாரி விண்ணப்பதாரிகளைக் கொண்டு பூர்த்தி செய்யப்படுவார்கள்.

ii. இறுதி வெற்றிடம் அல்லது இறுதி சில வெற்றிடங்களுக்காக சமபுள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிகமாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில், அவ்வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பான தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 01/2019(II) ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கமைய மேற்கொள்ளப்படும். பதவி நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியை தேசிய ஆவணக் காப்பக பணிப்பாளர் நாயகம் தீர்மானிப்பார்.

iii. எழுத்துப் பரீட்சை மற்றும் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை ஆகியவற்றில் பெற்றுக் கொண்ட மொத்தப் புள்ளிகளின் தகுதிக் கிரமத் திற்கமைய, தொடர்புடைய உத்தியோகத்தர் சேவை வகுதியின் காப்பக ஆவண உத்தி யோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப் படுவர் என்பதோடு, தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களில் எவரேனும் ஒருவர் ஏதேனும் ஒரு காரணத்தினால் நியமனத்தை ஏற்றுக்கொள்ளாவிடின் அல்லது கடமைக்கு சமுகமளிக்காவிடின், அதனால் ஏற்படும் வெற்றிடங்களுக்கு தகுதிக் கிரமத்திற்கமைய ஏனைய விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்வது தொடர்பாக தேசிய ஆவணக் காப்பக பணிப்பாளர் நாயகம் தீர்மானிப்பார்.

06. **பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணம் ரூபா 1200.00 ஆகும். மேலும், அந்தப் பரீட்சைக் கட்டணத்தை “தேசிய ஆவணக் காப்பக பணிப்பாளர் நாயகம்” எனும் பெயரில் மக்கள் வங்கியின் திம்பிரிகஸ்யாய கிளையிலுள்ள 086-1001-3902-6218 எனும் வங்கிக் கணக்கிலக்கத்தில் வைப்புச் செய்து, விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை, அதன் ஒரு விளிம்பின் ஊடாக விண்ணப்பப்பத்திரத்தின் குறித்த இடத்தில் கழறாதவாறு ஒட்டப்படுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு பரீட்சை ஒன்றிற்கு மாற்றப்படவும் மாட்டாது. அவ்வாறே பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக்கொள்வது பயனளிக்கக்கூடும்.

07. **விண்ணப்பிக்கும் முறை** :

(அ) விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு ஏற்ப அமைதல் வேண்டும் என்பதோடு, அது 8 1/2 “ x 12 “ என்ற அங்குல (ஏ4) அளவுடைய கடதாசியில் தயாரித்து விண்ணப்பதாரி தனது சொந்த கையெழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும். கணினியினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தையும் பயன்படுத்த முடியும். விண்ணப்பப்படிவத்தின் தலைப்புக்கள் இலக்கம் 01 தொடக்கம் 05 வரை முதல் பக்கத்தில் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பம் ஒரு மொழியினால் மாத்திரம் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்காத வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களும் முழுமையாகத் தகவல்கள் வழங்கப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். (பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.) பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளதா என்பதை விண்ணப்பதாரி உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாது விடின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட முடியும்.

(இ) பரீட்சைக்காக நிரப்பிய விண்ணப்பப்படிவத்தை பதிவுத் தபாலில் 2026.04.10 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப் பெறுகின்ற வகையில் “தேசிய ஆவணக் காப்பக பணிப்பாளர் நாயகம், தேசிய சுவடிக்கூடத் திணைக்களம், இல. 07, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு 07.” என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “தேசிய சுவடிக் கூடத் திணைக்களத்துடன் தொடர்புடைய உத்தியோகத்தர் சேவை வகுதியின் காப்பக ஆவண உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026” என தெளிவாக எழுதி அனுப்புதல் வேண்டும். 2026, ஏப்பிறல் 10 ஆந் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையின் அதிபர் அல்லது ஓய்வுபெற்ற அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, முப்படையில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல்

வெளியிடப்பட்ட பதவியொன்றில் வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா 240,360.00 இற்கு கூடுதலான கூட்டு வருடாந்த சம்பளம் பெறுகின்ற அரசின் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் பதவிநிலை தரத்துடைய உத்தியோகத்தரினால் அல்லது கட்டாயம் சான்றுபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும். தபாலில் விண்ணப்பப்படிவம் தொலைந்து போதல் அல்லது தாமதமடைதல் பற்றிய எந் தவொரு முறைப்பாடும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப் படும் முடிவுத் திகதி வரை விண்ணப்பங்களை அனுப்ப தாமதப்படுத்து =வதனால் ஏற்படக்கூடிய இழப்புக்களை விண்ணப்பதாரிகளே பொறுப் பேற்க வேண்டும்.

(ஊ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக எந்த வொரு அறிவித்தலும் வழங்கப்பட மாட்டாது. பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்கள் மாத்திரம் விண் ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத் தின்படி, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குரித்தான பற்றுச்சீட்டுடன் திருத்தமாக பூர்த்தி செய்துள்ள விண்ணப்பங்களை அனுப்பி வைத்த விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாக குறிப்பிட்டு அறிவித்தலொன்று இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www. slida.lk) பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியாகி 02 அல்லது 03 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்தி எவரேனும் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அது குறித்து இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பரீட்சைக் கிளையின் 011-5980264 அல்லது 011-5980225 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 08.30 முதல் பி.ப. 4.00 மணி வரை வினவ முடியும். அவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரி தான் தோற்றும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை திருத்தமாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தினால் வினவப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக தன்வசம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச் சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும். அதேபோன்று, பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் அது குறித்து அறிவிக்கும் குறுஞ்செய்தி (SMS) ஒன்று இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்படும்.

08. **பரீட்சைக்கு தோற்றுதல் :**

(அ) சகல விதத்திலும் முழுமைப்படுத்திய விண்ணப் பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். தனது பரீட்சை அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்காத எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டார்கள்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். சகல பரீட்சார்த்தியும் குறித்த பரீட்சை மண்டபத்திற்கு தமக்குரிய அனுமதி அட்டையில், தமது ஒப்பத்தை உறுதிப்படுத்தி முதலில் அம்மண்டபத்தில் தோற்றுகின்ற நாளில், அம்மண்டப பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு சகல பரீட்சார்த்திகளும் கீழ்ப்படிதல் வேண்டும். அப்பரீட்சை விதிமுறைகளை மீறுகின்ற பட்சத்தில் இலங்கை நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

குறிப்பு - பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமை கொண்டவராகக் கருதப்பட மாட்டார்.

(இ) பரீட்சார்த்தி/ பரீட்சார்த்திகள் பரீட்சை மண்ட பத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில்

தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆளடையாள அட்டை;
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு ;
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் உள்நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

09. **போலியான தகவல்களுக்கான தண்டனை :**

எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் என தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தத்தன்மையை இரத்துச் செய்வதற்கு வாய்ப்பிருக்கின்றது. பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் போலியானது என தெரிந்து வேண்டுமென்றே சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அறியவந்தால், அவ்வாறில்லையெனில், ஏதேனும் முக்கியமான தகவலை அவர் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவரை அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படும். பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு சகல பரீட்சார்த்திகளும் கீழ்ப்படிதல் வேண்டும்.

10. **ஏனைய விடயங்கள்:**

இவ்விதிமுறைகளில் கருத்திற் கொள்ளப்படாத விடயங்கள் தொடர்பில் தேசிய ஆவணக் காப்பக பணிப்பாளர் நாயகத்தின் முடிவின் படி நடவடிக்கை எடுக்கப்படும்.

தேசிய ஆவணக் காப்பக பணிப்பாளர் நாயகம்,
தேசிய சுவடிக்கூடத் திணைக்களம்.

தேசிய சுவடிக்கூடத் திணைக்களம்,
இலக்கம் 07 பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு 07,
2026, மார்ச் 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

**தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்துடன் தொடர்புடைய ஆவணக் காப்பக உத்தியோகத்தர் சேவை வகுதிக்கு (MN 4) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026**

Open Competitive Examination for the Recruitment of Allied Officers (MN 4) in the National Archives – 2026

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்:
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

01. 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்):
..........................................................................................................................................
( உதா: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியாக இடப்படும் பெயரை முதலிலும் மற்றைய பெயர்களின் முதலெழுத்துக்களை பின்னரும் இடப்பட்டு பெயர்: (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)

.......................................................................................................................................................

(உதா:GUNAWARDHANA, H.M.S.K.)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்):

.......................................................................................................................................................

02. 2.1 நிரந்தர வதிவிட முகவரி: ..........................................................................................................
(ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) ..........................................................................................................

2.2 அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி :

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

03. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

04. பெண் / ஆண் பால்நிலை : பெண் - 1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்) ஆண் - 0 | |

05. பிறந்த திகதி :

(அ) வருடங்கள்: | | | | | மாதங்கள்: | | | நாட்கள்: | | |

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடம்: | | | மாதம்: | | | திகதி : | | |

06. கையடக்கத் தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

07. மின்னஞ்சல்(e-mail) முகவரி :

.......................................................................................................................................................

08. கல்வித் தகைமைகள்:

(அ) I. பட்டம் : ..................................................................................

II. பல்கலைக்கழகம் / நிறுவனம் : ..........................................................................................................

III. பதிவிலக்கம் : ..........................................................................................

IV. பட்டம் செல்லுபடியாகும் திகதி : ........................................................

(ஆ) க.பொ.த. (உ.தரம்) பரீட்சைக்கு தோற்றிய வருடம் : | |

பரீட்சை சுட்டிலக்கம் : | |

| *பாடங்கள்* | *சித்திகள்* | *பாடங்கள்* | *சித்திகள்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |

(இ) க.பொ.த. (சா.தரம்) பரீட்சைக்கு தோற்றிய வருடம் :

பரீட்சை சுட்டிலக்கம் :

| *பாடங்கள்* | *சித்திகள்* | *பாடங்கள்* | *சித்திகள்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

09. மேலதிக கல்வித் தகைமைகள் :

| *நிறுவனம்* | *பாடநெறியின் பெயர்* | *கால வரையறை* | *சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

10. மேலதிக தொழிற்துறைத் தகைமைகள்:

| நிறுவனம் | பாடநெறியின் பெயர் | கால வரையறை | சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

11. பரீட்சைக் கட்டணம் (பற்றுச்சீட்டை இணைத்து அனுப்புதல் வேண்டும்.)

I. செலுத்தப்பட்ட வங்கி.......................................................................................................... :

II. செலுத்திய தொகை……………………………………………… :

III. செலுத்திய திகதி..................................................................... :

IV. பற்றுச்சீட்டு இலக்கம்.................................. :

| பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.) |
|---|

12. விண்ணப்பதாரியின் சான்றுரை/ சான்றிதழ் :

இவ் விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு மற்றும் நம்பிக்கையின் பிரகாரம், உண்மையானது என சான்றுரைக்கின்றேன். வழங்கப்படும் தகவல்கள் போலியானது என நான் தெரிவு செய்யப்பட முன்னர் தெரியவருமாயின் நான் தகுதியற்றவர் எனவும், நியமனம் செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து எந்தவொரு இழப்பீடும் இன்றி நான் சேவையிலிருந்து இடைநிறுத்தப்படுவதற்கும் கட்டுப்பட்டுள்ளேன் என அறிந்திருக்கின்றேன். மேலும், பரீட்சை நடாத்துவது தொடர்பாகவும் அதன் பெறுபேறுகளை வெளியிடுவது குறித்தும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கும் நான் கட்டுப்பட்டுள்ளேன் எனவும் சான்றுரைக்கின்றேன்.

...................................... ......................................................
திகதி கையொப்பம்

13. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல் : (ஏற்புடையதற்ற சொற்களை நீக்கவும்.)

இவ்விண்ணப்பப்படிவத்தினை முன்வைக்கின்ற திரு./ திருமதி/ செல்வி .................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் ................................ மாதம்.................. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பம் இட்டதாகவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும், அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும் இதனால் சான்றுப்படுத்துகின்றேன்.

சான்றுப்படுத்துநரின் கையொப்பம் :.........................................................................................
சான்றுப்படுத்துபவரின் முழுப் பெயர் :.........................................................................................
பதவி :.........................................................................................
முகவரி :.........................................................................................
(உத்தியோகபூர்வ இறப்பர் பதவி முத்திரை)

திகதி :.........................................................................................

**குறிப்பு** : விண்ணப்பத்தை சான்றுபடுத்த வேண்டியது வர்த்தமானி அறிவித்தலின் 07 ஆம் பந்தியில் (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

14. நிறுவனத் தலைவரின் பரிந்துரை:

இவ்விண்ணப்பப்படிவத்தினை முன்வைக்கின்ற திரு./ திருமதி/ செல்வ ................................................................ என்பவர் இவ்வமைச்சில் / திணைக்களத்தில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் சேவையில் பணியாற்றுகின்றார் என்பதோடு, அவர் மேற்படி பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படுவாராயின் இந்நிறுவனத்தின் சேவையில் இருந்து விடுவிக்க முடியும்.

................................................................................ உத்தியோகபூர்வ இறப்பர் பதவி முத்திரை
நிறுவனத் தலைவரின் கையொப்பம்

திகதி :.........................................................................................
நிறுவனத் தலைவரின் பெயர் :.........................................................................................
பதவி :.........................................................................................
சேவை நிலையத்தின் முகவரி :.........................................................................................

03-108

## இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தரம் II உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2019 II (2026)

இலங்கை தொழில்நுட்பச் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கு இணங்க மேற்படி பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2026 யூன் மாதத்தில் கொழும்பில் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

01. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால்நடாத்தப்படும்.பரீட்சையைநடாத்துவது தொடர்பில் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவது அவசியமாகும். இச்சட்ட திட்டங்களை மீறினால், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு அவர்கள் உட்பட வேண்டி ஏற்படும்.

(ii) விண்ணப்பதாரர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள், வர்த்தமானி அறிவித்தல் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

02. விண்ணப்பம் இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் https://www.doenets.lk இணைத்தளத்தின் "Our Services'' கீழுள்ள "Online Applications – Recruitment Exams/E.B.Exams" ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன் விண்ணப்பங்களை நிகழ்நிலை (Online) மூலமே சமர்பிக்கலாம். நிகழ்நிலை விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளும் 2026, மாச்சு மாதம் 16 ஆந் திகதி மு.ப.9.00க்கு திறக்கப்படும் என்பதுடன் 2026, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி இரவு 9.00க்கு முடிவடையும். விண்ணப்படிவத்தினை நிகழ்நிலையினூடாக அனுப் பிய பின்னர் அதனை தரவிறக்கம் செய்து, நகல் எடுக்கப்பட்ட பிரதியில் தேவையான பகுதிகளை கையால் நிரப்பி விண்ணப்பதாரியின் கையெழுத்தினை சான்றுரைப்படுத்தி, உரிய திணைக்கள தலைவரின் சான்றுரையுடன் விண்ணப்பங்களை ஏற்கும் இறுதி தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர்நாயகம், நிறுவன பரீட்சை ஒழுங்கமைப்பு கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பெறும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அடங்கிய உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் இறுதி தினம் வரையில் தாமதம் செய்வதனால் ஏற்படும் எந்தவொரு எதிர்நிலையினையும் விண்ணப்பதாரரினால் தாங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

03. ஆளடையாளம் :

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்காகவும் மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையும் விதத்தில் தமது ஆளடையாத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும். அதற்காகப் பின்வரும் ஆவணங்கள் மாத்திரமே செல்லுபடியாகும்.

(அ) தேசிய ஆளடையாள அட்டை;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு;
(இ) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அத்துடன் பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் முகத்தை மறைக்காது மற்றும் மின் தொடர்பாடல் கருவிகளை அணிந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையிலும் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். அத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்ததிலிருந்து பரீட்சை முடியும் வரை பரீட்சை அதிகாரிகளால் அடையாளம் காணக்கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

04. **விண்ணப்பப்படிவம் :**

i. நிகழ்நிலை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மென் பிரதி மற்றும் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்பட்ட அச்சுப் பிரதி (Printout) ஆகிய இரண்டும் பரீட்சைத் திணைக்களத்திற்குக் கிடைத்த பின்னர் அவ் மென் பிரதியினதும் அச்சுப் பிரதியினதும் உண்மைத்தன்மை சரிபார்க் கப்படும் (Verify) என்பதுடன் செல்லுபடியாகும் விண்ணப்பப்படிவமாக திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அல்லது ஏற்றுக் கொள்ளப்படவில்லையென முறைமையினுள் நுழைவதற்குப் பயன்படுத்தப்பட்ட கைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) மூலமாகவோ அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரத்தை (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள். விண் ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது அவ் அறிவுறுத்தல்களைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றுக்கொண்ட பின்னர், அதில் மேற்கொள்ளப்படும் எவ்விதத்

திருத்தங்களும் செல்லுபடியாகும் திருத் தங்களாகக் கருதப்படமாட்டாது. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குக் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

ii. இப்பரீட்சைக்கு முதன்முறையாகத் தோற்றும் உத்தியோகத்தர்கள் மூலம் எவ்வித பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்த அவசியமில்லை. அவ்வாறிருப்பினும், அதன் பின்னரான தடவைகளில் உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதாயின் ஒரு பாடத்திற்கான பரீட்சைக் கட்டணம் ரூ. 250.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது நிகழ்நிலை முறைமையினூடாக வழங்கப்படும் கட்டணச் செலுத்தல் வழிமுறைகளின் கீழ் மாத்திரமே செலுத்தப்பட ல் வேண்டும்.

i. எந்தவொரு வங்கியினதும் கடனட்டை மூலம் (Any Bank Credit Cards)
ii. இணையவழி கொடுக்கல் வாங்கல் வசதிகளைக் கொண்ட ஏதேனும் வங்கியின் செலவட்டை மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)
iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமையின் மூலம்/Flex செயலி மூலம் (Online Banking Method of Bank of Ceylon )
iv. எந்தவொரு இலங்கை வங்கியின் கிளைகளினூடாகவும் (Any Branch of Bank of Ceylon' Flex app)

குறிப்பு :-

(அ) மேற்கூறப்பட்ட முறைமையின் ஊடாக கொடுப்பனவு செய்யப் படும் முறைமை தொடர்பில் ஆலோ சனைகள் இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப ஆலோசனைகளின் கீழ் வெளியிடப் பட்டுள்ளது.

(ஆ) கொடுப்பனவு கிடைக்கப் பெற்ற தென குறுந்தகவலொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் தகவலொன்றின் (Email) மூலம் அறியத்தரப்படும். பரீட்சை கட்டணத்திற்கான முழுப் பணமும் செலுத்த வேண்டியதுடன் பரீட்சை கட்டணத்தை குறைவாகவோ அல்லது அதிகமாக செலுத்தியுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக் கப்படும். மேற்குறிப்பிட்ட கொடுப் பனவு முறைமையின் மூலம் பரீட்சை கட்டணத்தை செலுத்தும் போது ஏற்படும் குறைபாடுகள் தொடர்பில் இலங்கை பரீட்சை திணைக்களம் பொறுப்பாக மாட்டாது.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்படும் பணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீள செலுத்தல் அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றப்படல் நடைபெறாது.

iii. இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிமூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர்கள் தமக்குரிய மொழிமூலமொன்றைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன் உரிய அனைத்துப் பாடங்களுக்கும் அம்மொழிமூலத்திலேயே விடை எழுதுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

iv. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியில் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தரம் II இற்கு தரமுயர்வு பெற்ற உத்தியோகத்தர்கள் மாத்திரம் முதலாம் வினைத்திறன் காண் தடைத்தாண்டல் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

05. (i) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிப்பார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை சரியாக நிகழ்நிலையினூடாக சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களிடம் பரீட்சை ஆணை யாளரால் நிகழ்நிலையினூடாக மட்டும் பரீட்சை அனுமதிப்பத்திரம் வெளியிடப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரம் வெளியிடப்பட்ட உடன் அதனை குறிப்பிட்டு அறிவித்தலொன்றை இலங்கை பரீட்சை திணைக்களத்தின் இணையத்தளத்தின் மூலம்/ விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ் செய்தியினூடா கவும் அறிவிக்கப்படும். தமது அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெறாத பரீட்சாத்தியொருவர் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்படும்படி அது தொடர்பில் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் தாபன பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விலாசத்தினை சரியாகக் குறிப்பிட்ட

கோரிக்கை கடிதத்தினை இணைய அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரிப்பது, மிகவும் பொருத்தமானது. அவ்வாறு விசாரிக்கும் போது இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் விசாரிக்கும் ஏதேனும் தகவலொன்றை உறுதிப்படுத்துவதற்காக பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தின் நிழற்பட பிரதி/ பரீட்சை கட்டணம் செலுத்துகை உரியதெனில் அதற்குரிய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தினை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றை தம்வசம் வைத்திருப்பதும் பிரயோசனமானதாகும். பரீட்சை அனுமதி அட்டையைப் பரீட்சித்து பார்த்து திருத்தங்கள் இருப்பின் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு விண்ணப்பப்படிவத்திற்கு அமைய உரிய திருத்தங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் திருத்தங்கள் தொடர்பாக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

மேற்குறித்த தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யத் தவறும் விண்ணப்பதாரர்களால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.

(ii) பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் ஊடாகச் சான்றுப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் தங்களது கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரங்களை மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைவதற்குரிய காலப் பகுதியினுள் தமது தற்றுணிபின் அடிப்படையில் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வெவ்வேறு தடவைகளிலும் உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்ற முடியும். எவ்வாறாயினும், சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுவது அவசியமாகும்.

07. **பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுதல் :**

மாகாண அரசாங்க சேவையின் உத்தியோகத்தர்களின் பெறுபேறுகள் உரிய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கும், மத்திய அரசாங்க சேவையின் உத்தியோகத்தர்களின் பெறுபேறுகள் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கும் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானது. பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் பின்னர், உரித்தாகும் சேவையைத் திருத்தம் செய்வது தொடர்பாக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

08. **பரீட்சை நடைமுறைகள் :**

II ஆம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை பின்வரும் 02 வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும்.

பாட இலக்கம் (03) - தாபனவிதிக் கோவை (நேரம் 2 மணித்தியாலங்கள்) (100 புள்ளிகள்)

பாட இலக்கம் (04) - நிதிப் பிரமாணங்கள் (நேரம் 02 மணித்தியாலங்கள்) (100 புள்ளிகள்)

**தாபனவிதிக் கோவை (பாட இலக்கம் - 03) - பாடத்திட்டம்**

இவ்வினாப்பத்திரம் தாபனவிதிக் கோவையின் பின்வரும் அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டதா அமையும்.

| | |
|---|---|
| XV ஆம் அத்தியாயம் | கற்கை, பயிற்சி அல்லது கடமை நிமித்தம் வெளிநாடு செல்லல் |
| XVI ஆம் அத்தியாயம் | விடுமுறைப் பிரயாணங்கள் |
| XXIII ஆம் அத்தியாயம் | சிலவகை நோய்களால் பீடிக் கப்பட்டுள்ள அரசாங்க உத்தி யோகத்தர்களுக்கான விசேட சலுகைகள் மற்றும் அவை தொடர்பான நிபந்தனைகள் |
| XXIV ஆம் அத்தியாயம் | சம்பளக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் |
| XXV ஆம் அத்தியாயம் | தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களுக்கான சலுகைகள் |
| XXVII ஆம் அத்தியாயம் | தொடர்பிணைப்பு வழி |
| XXVIII ஆம் அத்தியாயம் | நிர்வாக நடைமுறைகளும் செயல்முறைகளும் |
| XXX ஆம் அத்தியாயம் | அரசாங்கம் பணியாளர்கள் மீது கொண்டுள்ள உரிமைகள் |
| XXXIII ஆம் அத்தியாயம் | சட்ட மதியுரையும் சட்ட நடவடிக்கைகளும் |
| XLVII ஆம் அத்தியாயம் | பொதுவான நடத்தைகளும் ஒழுக்கமும் |
| XLVIII ஆம் அத்தியாயம் | ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான விதிமுறைகள் |

**நிதிப் பிரமாணங்கள் (பாட இலக்கம் - 04) - பாடத்திட்டம்**

இவ்வினாப்பத்திரம் நிதிப் பிரமாணங்களின் பின்வரும் அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டதாக அமையும்.

(i) VI ஆம் அத்தியாயம்
அரசாங்க நிதி முதலியவற்றிற்கான பொறுப்பு, கட்டு நிதி மற்றும் வங்கிக் கணக்குகள், உப படிவப் புத்தகங்கள், நிதி, முத்திரைகள் போன்றவை தொடர்பான தொகை மதிப்பீட்டுச் சபைகள், கட்டு நிதி, வங்கிக் கணக்குகள்.
(நி.பி. 315 முதல் 396 வரை)

(ii) XIII ஆம் அத்தியாயம்
வழங்கல்கள், வேலைகள் மற்றும் சேவைகள்

பெறுகைகள் மற்றும் ஒப்பந்தங்கள், வழங்கல்கள், பொருட்களின் பொறுப்பு மற்றும் சரிபிழை பார்த்தல், மேலதிக பொருட்கள் மற்றும் பயன்படுத்த முடியாத பொருட்கள்

(நி.பி. 685 முதல் 775 வரை)

09. இந்தப் பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப் படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரது தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

10. விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதிப் பத்திரங் கள் வழங்கப்படுவதை அவர்கள் பரீட்சைக்கு தோற்று வதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக் கொண்டதாகக் கருதக்கூடாது.

11. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிமூலங்களில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தலில் மொழி வாசகங் களுக்கு இடையில் ஏதேனும் பொருத்தமின்மைகள் அல்லது இணக்கமின்மைகள் இருப்பதாகத் தெரிய வருமிடத்து அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழிமூலமான அறிவித்தல் பயன்வலுப் பெறும்.

எஸ். ஆலோகபண்டார,
செயலாளர்,
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி
அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2026, மாச்சு 05.

03-133

## இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை - 2019 II (2026)

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் அங்கீகரிக் கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கு இணங்க மேற்படி பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2026 யூன் மாதத்தில் கொழும்பில் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

01. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன் பரீட்சையை நடாத்துதல் தொடர்பாக அவரினால் விதிக்கப்பட்டுள்ள சட்ட விதிமுறைகளுக்கு விண்ணப்பதாரிகள் கட்டுப்படல் வேண்டும். அவ்விதிமுறைகளை மீறும்பட்சத்தில், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப் படும் தண்டனைக்கு அவர்கள் உள்ளாக நேரிடும்.

(ii) விண்ணப்பதாரர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள், வர்த்தமானி அறிவித்தலில் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

02. விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் https://www.doenets.lk எனும் இணைத்தளத்தின் "Our Services'' இன் கீழுள்ள "Online Applications – Recruitment Exams/ E.B. Exams" ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன் விண்ணப்பப்படிவங்களை நிகழ்நிலை (Online) மூலமே சமர்பிக்கலாம். நிகழ்நிலை விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ளும் 2026, மாச்சு மாதம் 16 ஆந் திகதி மு.ப.9.00க்கு திறக்கப்படும் என்பதுடன் 2026, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி பி. ப. 9.00 க்கு முடிவடையும். விண்ணப்பப்படிவத்தினை நிகழ்நிலையினூடாக அனுப்பிய பின்னர் அதனை தரவிரக்கம் செய்து, நகல் எடுக்கப்பட்ட பிரதியில் தேவையான பகுதிகளை கையால் நிரப்பி விண்ணப்பதாரியின் கையெழுத்தினை சான்றுரைப்படுத்தி, உரிய திணைக்கள தலைவரின் சான்றுரையுடன் விண்ணப்பப்படிவங்களை ஏற்கும் இறுதி தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவன பரீட்சை ஒழுங்கமைப்பு கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் விலாசத்திற்கு பெறும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அடங்கிய உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் இறுதித் தினம் வரையில் தாமதம் செய்வதினால் ஏற்படும் எந்தவொரு எதிர்நிலையினையும் விண்ணப்பதாரரினால் தாங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

03. **ஆளடையாளம் :**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்காகவும் மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையும் விதத்தில் தமது ஆளடையாளததை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

(அ) தேசிய அடையாள அட்டை;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு;
(இ) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அத்துடன் பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையிலும் முகத்தை மறைக்காது மற்றும் மின் தொடர்பாடல் கருவிகளை அணிந்திருக்கவில்லை என்பதை கொள்ளும் வகையில் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். அத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்ததிலிருந்து பரீட்சை முடியும் வரை பரீட்சை அதிகாரிகளால் அடையாளம் காணக்கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

04. **விண்ணப்பப்படிவம் :**

i. நிகழ்நிலை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மென் பிரதி மற்றும் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்ட அச்சுப் பிரதி (Printout) ஆகிய இரண்டும் பரீட்சைத் திணைக்களத்திற்குக் கிடைத்த பின்னர் அம் மென் பிரதியினதும் அச்சுப் பிரதியினதும் உண்மைத்தன்மை சரிபார்க்கப் படும் (Verify) என்பதுடன் செல்லுபடியாகும் விண்ணப்பப்படிவமாக திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அல்லது ஏற்றுக் கொள்ளப்படவில்லையென முறைமையினுள் நுழைவதற்குப் பயன்படுத்தப்பட்ட கைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) மூலமாகவோ அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரத்தை (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள். விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது அவ் அறிவுறுத்தல்களைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றுக்கொண்ட பின்னர், அதில் மேற்கொள்ளப்படும் எவ்விதத் திருத்தங்களும் செல்லுபடியாகும் திருத் தங்களாகக் கருதப்படமாட்டாது. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குக் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

ii. இப்பரீட்சைக்கு முதன்முறையாகத் தோற்றும் உத்தியோகத்தர்கள் மூலம் எவ்வித பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்த அவசியமில்லை. அவ்வாறிருப்பினும், அதன் பின்னரான தடவைகளில் உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதாயின் ஒரு பாடத்திற்கான பரீட்சைக் கட்டணம் ரூ. 250.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது நிகழ்நிலை முறைமையினூடாக வழங்கப்படும் கட்டணச் செலுத்தல் வழிமுறைகளின் கீழ் மாத்திரமே செலுத்தப்பட ல் வேண்டும்.

❖ எந்தவொரு வங்கியினதும் கடனட்டை மூலம் (Any Bank Credit Cards)

❖ இணையவழி கொடுக்கல் வாங்கல் வசதிகளைக் கொண்ட ஏதேனும் வங்கியின் செலவட்டை மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)

❖ இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமையின் மூலம் /Flex செயலி மூலம் (Online Banking Method of Bank of Ceylon/Flex App)

❖ எந்தவொரு இலங்கை வங்கியின் கிளைகளினூடாகவும் (Any Branch of Bank of Ceylon)

குறிப்பு :-

(அ) மேற்கூறப்பட்ட முறைமையின் ஊடாக கொடுப்பனவு செய்யப்படும் முறைமை தொடர்பில் ஆலோசனைகள் இணையத் தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப ஆலோசனைகளின் கீழ் வெளியிடப் பட்டுள்ளது.

(ஆ) கொடுப்பனவு கிடைக்கப் பெற்றதென குறுந்தவலொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் தகவலொன்றின்

(Email) மூலம் அறியத்தரப்படும். பரீட்சை கட்டணத்திற்கான முழுப் பணமும் செலுத்த வேண்டியதுடன் பரீட்சை கட்டணத்தை குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தியுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கொடுப்பனவு முறைமையின் மூலம் பரீட்சை கட்டணத்தை செலுத்தும் போது ஏற்படும் குறைபாடுகள் தொடர்பில் இலங்கை பரீட்சை திணைக்களம் பொறுப்பாக மாட்டாது.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்படும் பணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீள செலுத்தல் அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றப்படல் நடைபெறாது.

iii. இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிமூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்ப தாரர்கள் தமக்குரிய மொழிமூலமொன்றைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன் உரிய அனைத்துப் பாடங்களுக்கும் அந்த மொழிமூலத்திலேயே விடை எழுதுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப் படமாட்டாது.

iv. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியில்இலங்கைதொழில்நுட்பவியல்சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் தரம் III இன் உத்தியோகத்தர்கள் மாத்திரம் முதலாம் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

05. (i) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிப்பார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் விண்ணப்பங்கள் பொறுப் பேற்கப்படும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை சரியாக நிகழ்நிலையினூடாக சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களிடம் பரீட்சை ஆணை யாளரால் நிகழ்நிலையினூடாக மட்டும் பரீட்சை அனுமதிப் பத்திரம் வெளியிடப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரம் வெளியிடப்பட்ட உடன் அதனை குறிப்பிட்டு அறிவித்தலொன்றை இலங்கை பரீட்சை திணைக்களத்தின் இணையத்தளத்தின் மூலம் / விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ் செய்தியினூடா கவும் அறிவிக்கப்படும். தமது அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெறாத பரீட்சாத்தியொருவர் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்படும்படி அது தொடர்பில் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் தாபன பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விலாசத்தினை சரியாகக் குறிப்பிட்ட கோரிக்கை கடிதத்தினை இணைய அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பொருத்தமானது. அவ்வாறு விசாரிக்கும் போது இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் விசாரிக்கும் ஏதேனும் தகவலொன்றை உறுதிப்படுத்துவதற்காக பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தின் நிழற்பட பிரதி/ பரீட்சை கட்டணம் செலுத்துகை உரியதெனில் அதற்குரிய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தினை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்த பற்றுச்சீட்டினை தம்வசம் வைத்திருப்பதும் பிரயோசனமானதாகும். பரீட்சை அனுமதி அட்டையைப் பரீட்சித்து பார்த்து திருத்தங்கள் இருப்பின் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு விண்ணப் பப்படிவத்திற்கு அமைய உரிய திருத்தங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் திருத்தங்கள் தொடர்பாக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(ii) பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்ப தாரர்களின் கையொப்பமானது நிறுவனத் தலைவரினால் அல்லது அவரினால் அதிகார மளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் சான்றளிக் கப்படல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள் மூலம், தமது கையொப்பம் சான்றளிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை மாத்திரமே பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பதாரரொருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவிக்கான தகைமை களைப் பூர்த்தி செய்துள்ளதான ஏற்பாகக் கருதப் படக் கூடாது.

(iv) பரீட்சை விண்ணப்பதாரர்கள் தமக்கு ஒதுக்கப் பட்டுள்ள பரீட்சை மத்திய நிலையத்தில் பரீட் சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

06. முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைவதற்குரிய காலப் பகுதியினுள் தமது தற்றுணிபின் அடிப்படையில் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித் தனியாகவும் வெவ்வேறு தடவைகளிலும் உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்ற முடியும். எவ்வாறாயினும், சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுவது அவசியமாகும்.

07. **பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுதல் :**

மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் களின் பெறுபேறுகளை உரிய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கும், மத்திய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் பெறுபேறுகள் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கும் அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். பரீட்சை பெறுபேறுகள் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானது. பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் பின்னர், உரித்தாகும் திருத்தம் செய்வது தொடர்பாக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

08. **பரீட்சை நடைமுறைகள் :**

III ஆம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை பின்வரும் 02 வினாப்பத்திரங்களைக் கொண்டி ருக்கும்.

பாட இலக்கம் (01) - தாபனவிதிக் கோவை மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகள் (நேரம் 2 மணித்தியாலங்கள்) (100 புள்ளிகள்)

பாட இலக்கம் (02) - நிதிப் பிரமாணங்கள் (நேரம் 2 மணித்தியாலங்கள்) (100 புள்ளிகள்)

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செய லொழுங்கு விதிகள்

(பாட இலக்கம் - 01) - பாடத்திட்டம்

இவ்வினாப்பத்திரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதி களையும் தாபனவிதிக் கோவையின் பின்வரும் அத்தியாயங்களையும் அடிப்படை யாகக் கொண்டதாக அமையும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செய லொழுங்கு விதிகள்

| | |
|---|---|
| VIII ஆம் அத்தியாயம் | மேலதிக நேரப்படிகள், விடுமுறை நாட்கள் மற்றும் விடுமுறை நாள் சம்பளங்கள் மற்றும் படிகள் |
| XII ஆம் அத்தியாயம் | லீவு |
| XIII ஆம் அத்தியாயம் | புகைவண்டி ஆணைச் சீட்டுகள் |
| XIV ஆம் அத்தியாயம் | உள்நாட்டில் கடமைப் பிரயாணம் |
| XIX ஆம் அத்தியாயம் | அரசாங்க இல்லங்கள் |

நிதிப் பிரமாணங்கள் (பாட இலக்கம் - 02) - பாடத்திட்டம்

இவ்வினாப்பத்திரம் நிதிப் பிரமாணங்களின் பின்வரும் அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும்.

(i) 1 ஆம் அத்தியாயம்.

**செலவின மற்றும் வருமான மதிப்பீடுகள்**

திரட்டு நிதியம் மற்றும் செலவினங்களைத் திட்டமிடல் மற்றும் நிகழ்ச்சித் திட்டம் தயாரித்தல், வருடாந்த செலவின மதிப்பீடுகைச் சமர்ப்பிக்கும்

வடிவம், புதிய பிரேரணைகள், செலவு மதிப்பீடுகளைத் தயாரித்தல், செலவின மதிப்பீடுகளில் மாற்றங்கள் செய்தல்

(நி.பி.1 முதல் 68 வரை)

(ii) III ஆம் அத்தியாயம்

**நிதி முகாமையும் வகைகூறலும்**

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், அரசிறைக் கணக்கு உத்தியோகத்தர்கள் கொடுப்பனவுக்காக அதிகாரமளித்தல், அங்கீகாரம் வழங்குதல், உறுதிப்படுத்துதல், பணிகளை ஒப்படைத்தல்

(நி.பி. 124 முதல் 147 வரை)

09. இந்தப் பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் பொது

நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

10. விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுவதை அவர்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக் கொண்டதாகக் கருதக்கூடாது.

11. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிமூலங்களில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தலில் மொழி வாசகங்களுக்கு இடையில் ஏதேனும் பொருத்த மின்மைகள் அல்லது இணக்கமின்மைகள் இருப்பதாகத் தெரிய வருமிடத்து அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழிமூலமான அறிவித்தல் பயன்வலுப் பெறும்.

எஸ்.ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி
அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2026, மாச்சு 05.

03-134

---

## நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## இலங்கை சுங்கத் திணைக்களம்

பிரதான சுங்க பரிசோதகர்கள் மற்றும் I ஆம் தர சுங்கப் பரிசோதகர்கள் ஆகியோர்களுக்கு,

### இலங்கைச் சுங்கத் திணைக்களத்தில் உதவி சுங்க அத்தியட்சகர் தரம் II பதவிக்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2026

உதவி சுங்க அத்தியட்சகர் தரம் II ஆம் பதவியில் தற்போதுள்ள வெற்றிடங்களில் 15% இனை நிரப்பப்புவதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள,

(அ) பிரதான சுங்க பரிசோதகர்கள் அல்லது

(ஆ) சுங்கப் பரிசோதகர் தரம் I இல் 02 வருட சேவைக் காலத்தினைப் பூர்த்திசெய்து பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள தரம் I ஐச் சேர்ந்த சுங்கப் பரிசோதகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **தகைமைகள் :**

1.1 **அனுபவம் :**

i. பிரதான சுங்கப் பரிசோதகராக அல்லது 02 வருட சேவைக் காலத்துடன் சுங்கப் பரிசோதகர் தரம் I பதவியில் நிரந்தர நியமனமொன்றினைப் பெற்றிருத்தல்.

ii. அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைத் திட்டத்திற்கேற்ப விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னுள்ள 05 வருட காலப் பகுதியில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தில் செயலாற்றுகையினை வெளிப்படுத்தி இருத்தல்.

1.2 **ஏனையவை :**

i. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் பிரகாரம் குறித்த காலப் பகுதியினுள் ஒழுக்காற்று நடவடிக்கையொன்றுக்கு உட்படாதிருத்தல்.

ii. பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு தேவையான மேலே 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற இறுதித் திகதியான 2026.04.06 ஆம் திகதிக்கு முன்பதாக பூர்த்தி செய்திருப்பது கட்டாயமானதாகும்.

02. விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் “Our Services” என்ற பிரிவின் கீழுள்ள “Online Application – (Recruitment /E.B. Exams)” இல் வெளியிடப்பட்டுள்ளதோடு, இதற்காக நிகழ்நிலையில் (Online) மாத்திரம் விண்ணப்பிக்கலாம். நிகழ்நிலை வழியாக விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்வதானது, 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆம் திகதி மு.ப.9.00 மணிக்கு ஆரம்பமாகி, 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ஆம் திகதி பி.ப. 9.00 மணியுடன் முடிவடையும்.

அலுவலர்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றை தமது தனியாள் கோப்பில் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டிய அதேவேளையில், நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் சான்று படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதி ஒன்றையும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் இறுதி திகதி வரை தாமதிப்பதன் மூலம் ஏற்படுகின்ற எந்த ஒரு பாதகமான நிலைமைக்கும் விண்ணப்பதாரர்களினால் பொறுப்பேற்கப்படுதல் வேண்டும்.

நிகழ்நிலை (Online) வழியான விண்ணப்பப் படிவங்களை ஆங்கில மொழியில் மாத்திரம் பூரணப்படுத்தல் வேண்டும். விண்ணப்பதாரரினால் நிகழ்நிலை வழியாக மென் பிரதி வடிவில் அனுப்பப்பட்ட பிரதி செல்லுபடியான விண்ணப்பப் படிவம் என திணைக்களத்தினால் கையேற்கப்பட்டது/ கையேற்கப்படவில்லை என வலையமைப்பிற்கு நுழைவதற்காக பயன்படுத்தப்படுகின்ற செல்லிட தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தியொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) மூலம் விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை வழியில் விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பது எவ்வாறு என்பது குறித்து தயாரிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை (Instructions) விண்ணப்பதாரர்கள் பதிவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்படிவத்தை பூர்த்தி செய்கையில் இந்த வழிகாட்டுதல்கள் கட்டாயமாகப் பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியில் பின்னர் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு திருத்தமும் செல்லுபடியானதாக கருதப்படமாட்டாது. முழுமையாக பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் யாவும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

03. இப் பரீட்சைக்கான கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தினை செலுத்துகையில் நிகழ்நிலை வழியாக ஏற்படுத்தப்பட்டுள்ள பின்வரும் கட்டணக் கொடுப்பனவு முறைகளில் கீழ் மாத்திரம் கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

(i) ஏதேனும் வங்கியொன்றின் கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)
(ii) நிகழ்நிலையில் கொடுப்பனவு செய்வதற்காக செயலாக்கம் செய்யப்பட்ட பற்று அட்டை மூலம் (Debit Card with Online Payment Facility)
(iii) இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமை மூலம் (Online Banking Method, Bank of Ceylon)
(iv) ஏதேனும் இலங்கை வங்கிக் கிளையொன்றின் மூலம் (Slip Payment Bank of Ceylon)

குறிப்பு :

(அ) மேற்குறித்த முறைமை மூலம் கொடுப்பனவினை மேற்கொள்கின்ற முறை தொடர்பிலான வழி காட்டல்கள் இணையதளத்தில் பரீட்சைகளுக்கான தொழில்நுட்ப வழிகாட்டுதல்கள் என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கட்டணம் கிடைக்கப்பெற்றது எனக் குறுஞ்செய்தி (SMS) ஒன்றின் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணம் முழுமையாக செலுத்தப்படுதல் வேண்டும். கட்டணம் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறித்த கட்டண முறையின் கீழ் பரீட்சைக் கட்டணத்தை செலுத்துவதில் ஏற்படும் தாமதங்களை பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணமானது எச்சந்தர்ப்பத்திலும் மீள செலுத்தப்படவோ அல்லது வேறொரு பரீட்சைக்கோ மாற்றப்படவோமாட்டாது.

04. இப்பரீட்சையானது எழுத்துப் பரீட்சை மற்றும் பொது நேர்முகப் பரீட்சை ஆகிய இரு பகுதிகளைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு பரீட்சைக்குமான புள்ளிகள் மற்றும் ஒதுக்கப்பட்டுள்ள நேரம் வருமாறு :

பகுதி I - எழுத்துப் பரீட்சை

| | *மொத்தப் புள்ளிகள்* | *கடவுப் புள்ளிகள்* |
|---|---|---|
| பொது உளச்சார்புப் பரீட்சை (01 மணித்தியாலம்) | 100 | 50 |
| ஆங்கில மொழி (1 ½ மணித்தியாலம்) | 100 | 50 |
| சுங்கச் சட்டம் மற்றும் நடைமுறை (03 மணி நேரம்) | 100 | 50 |

பகுதி II - பொது நேர்முகப் பரீட்சை (புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது)

பதவிக்குரிய ஆட்சேர்ப்புக்குத் தேவையான அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ளனரா என்பதனைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து, உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களின் புள்ளிகளின் தகைமை இறங்கு வரிசைக்கு அமைய பதவியில் வெற்றிடமாகவுள்ள எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையிலான தொகையினரை ஆட்சேர்ப்பதற்கு முடியுமாக்கும் வகையில்

போதுமானளவிலான விண்ணப்ப தாரர்கள் பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டு, தகைமைகள் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் ஆட்சேர்க்கப்படும்.

இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர்கள் சகல பரீட்சையினையும் ஒரு மொழியிலேயே தோற்ற வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் பரீட்சையின் மொழியினை மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கள் தற்போதுள்ள சேவைக்கு உள்வாங்குவதற்கு தகுதிபெற்ற மொழியில் இப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பிக்க முடியும்.

05. இப்பரீட்சையின் பாடங்களது பாடத்திட்டமானது வருமாறு:

5.1 "பொது உளச்சார்பு" வினாத்தாள் தொடர்பிலான பாடத்திட்டம் -

மொழித் தேர்ச்சி மற்றும் தர்க்க சக்தி, புள்ளிவிபரவியல் ஆற்றல், பொது நுண்ணறிவு மற்றும் பகுப்பாய்வுத் திறன் என்பனவற்றினை அளவிடும் வகையில் பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளிக்கும் மாதிரியில் ஐம்பது (50) வினாக்களைக் கொண்டிருக்கும்.

5.2 "ஆங்கில மொழி " பரீட்சைக்கான பாடத் திட்டம்-

ஆங்கில மொழியில் வாசிப்பு, எழுத்து, கிரகித்தல் மற்றும் தொடர்பாடல் திறன்களை அளவிடுவத ற்காக தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரமாகும்.

5.3 "சுங்க சட்டம் மற்றும் நடைமுறைகள்" வினாத் தாளுடன் சம்பந்தப்பட்ட பாடத்திட்டம் : -

i.

* கடல் மார்க்க/ஆகாய மார்க்கமான சரக்குகளை ஏற்றுதல், இறக்குதல், களஞ்சியப்படுத்துதல் மற்றும் வெளியாக்குதல்.
* இறக்குமதி களஞ்சியசாலையொன்றில் பொறுப் பாகவுள்ள உதவி சுங்க அத்தியட்சகர் தரம் II அவர்களது கடமைகள்.
* நீலப் புத்தகத்தினைப் பூர்த்தி செய்தல்.
* மதுபானக் களஞ்சியசாலையில் பொறுப் பாகவுள்ள உதவி சுங்க அத்தியட்சகர் தரம் II அவர்களது கடமைகள்.

ii. **ஏற்றுமதிகள்** :

* தரையிறங்குவதற்காகப் பெறப்பட்ட சரக்கு தொடர்பில்.
* பின்பற்றப்படும் நடைமுறை.
* ஏற்றுமதி விபரங்களை நுண்ணாய்வு செய்தல்.
* இருப்புக் கையேட்டினை பேணுதல்.

iii. **மாற்றி ஏற்றல் சரக்கு** :

* கடல் மார்க்கப் பொருட்கள் தொடர்பிலான பொதியிலடைக்கப்பட்ட சரக்கு மற்றும் பொதி யிலடைக்கப்படாத சரக்கு
* மாற்றி ஏற்றல் பொருட்பட்டியல்களை தயாரித்தல்
* கரையோர கப்பல் சரக்கு

iv. பிணைப்படுத்தப்பட்ட களஞ்சியசாலைகளுடன் தொடர்புபட்ட வெளியாக்கல் செயல்முறை

v. பொது – மீளளிப்புச் செய்தல் மற்றும் மீளளிப்பினை அனுமதிப்பது தொடர்பிலான நிபந்தனைகள்

* தீர்வைக் கட்டண மீளளிப்பு தொடர்பில் தாக்கம் செலுத்துகின்ற ஒழுங்குவிதிகள், மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் தடை செய்யப்பட்ட பொருட்களது அட்டவணை - நாட்டுக்குள்ளும் மற்றும் நாட்டிலிருந்து வெளியேயும்,
* சுங்க கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தாத சரக்குகள், பிழையான பிரகடனம் மற்றும் பொருட்களது பெறுமதியினை குறைத்து மதிப்பிடல் ஆகியவை தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைக்காக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள்.
* பரிசோதனை செய்தல் மற்றும் தடுப்புக் காவலில் வைத்தல் என்பவை தொடர்பில் சுங்கக் கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள நடைமுறைகள்.
* சட்ட ரீதியற்ற முறையில் பண்டங்களைப் போக்குவரத்து செய்தலுக்குகெதிராக நடவடிக்கை எடுப்பதற்காக சுங்கக் கட்டளைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் அலுவலர்களது கடமைகளுடன் தொடர்புபட்ட சகல திணைக்களக் கட்டளைகள்

06. 6.1 பொது உளச்சார்புப் பரீட்சை, ஆங்கிலம், சுங்கச் சட்டம் மற்றும் நடைமுறை போன்ற மூன்று (03) பாடங்களில் ஒவ்வொன்றிலும் ஆகக் குறைந்தது 50 புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரர் கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து மற்றும் நேர்முகப் பரீட்சையில் தகுதிபெற்ற விண்ணப்பதாரர்கள் குறித்த ஆட்சேர்ப்பிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய நியமனங்களை வழங்குவதற்காக தெரிவு செய்யப்படுவதோடு, ஆட்சேர்ப்பிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவி வெற்றிடங்களில் 10% இற்கு மேற்படாத வெற்றிடங்கள் பெண் விண்ணப்பதாரர்களுக் கும் ஒதுக்கப்படும்.

6.2 பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதல்

மேலே 6.1 ஆம் பந்திக்கு அமைய தகுதிபெறுகின்ற விண்ணப்பதாரர்களின் பெயர்கள் அடங்கிய பெறுபேறுப் பட்டியல் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு கையளிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் தபால் மூலம் அல்லது www.results.exams.gov.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளம் ஊடாக பரீட்சைப் பெறுபேறுகளை அறிவிப்ப தற்காக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும்.

6.3 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள நபர் களினால் மாத்திரம் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனும் ஊகத்தின் பேரில், விண்ணப்பங்களை சமர்ப்பித்த சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்படும். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்டதும் பரீட்சைத் திணைக் களம் அது தொடர்பாக பத்திரிகை அறிவிப் பொன்றினை வெளியிடும். அவ் அறிவித்தல் வெளியாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் பரீட்சைகள் ஏற்பாட்டுக் கிளையில் விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கையில் விண்ணப்பதாரர் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம், முகவரி என்பனவற்றை சரியாக குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்பின் வெளிப் பிரதேசத்தில் வசிப்பவராயின், மேலே குறிப்பிட்ட விடயங்களுடன் அனுமதி அட்டையினைத் துரிதமாக அனுப்புவதற்கான பெக்ஸ் இலக்கம், குறிப்பிட்ட கோரிக்கை கடிதமொன்றினை அனுப்புவதன் மூலம் திணைக்களத்தினை தொடர்புகொள்ளவதற்கு மிகவும் பொருத்தமாகவிருக்கும். இதன்போது இலங்கைப் பரீட்சைக் திணைக்களத்தினால் கோரப்பட்ட ஏதேனுமொரு தகவலினை உறுதிப்படுத்துவதற்காக தம்முடன் வைத்துக் கொண்ட விண்ணப்ப படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் பதிவுத்தபால் பற்றுச் சீட்டு என்பனவற்றினை தயார்நிலையில் வைத்திருப்பது பிரயோசனமாக இருக்கும்.

6.4 ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அவருக்கு பரீட்சை மண்டபத்தில் ஒதுக்கப்பட்டுள்ள சுட்டிலக்கத்திற்கு இணங்க பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற ஒவ்வொரு விண்ணப்பதாரியும், பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளிலேயே பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தமது அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

07. பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்குமாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்கள் திருப்தியுறும் வகையில் தமது சுய ஆள் அடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்றினை அவர்கள் சமர்ப்பிக்கலாம்.

(i) தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியான வாகன சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே, விண்ணப்பதாரிகள் தமது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு முடியுமான வகையில் முகங்களையும் காதுகளையும் திறந்த நிலையில் பரீட்சை நிலையத்தினுள் நுழைய வேண்டும். மேலும், தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்க மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை நிலையத்தினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை நிலையத்தினுள் நுழைந்தது முதல் பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரையில் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்களுக்கு விண்ணப்பதாரர்களை ஆள் அடையாளம் காணும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் திறந்த நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

08 8.1 விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டையினை வழங்குவதானது, விண்ணப் பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான ஏற்றுக் கொள்ளத்தக்க சான்றாக கருதுதல் ஆகாது.

8.2. இப் பரீட்சையானது 2026 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும். பரீட்சை நடாத்தப்படுகின்ற திகதி மற்றும் இடம் என்பன பின்னர் அறிவிக்கப்படும்.

09. பரீட்சையினை நடாத்துதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பன வற்றிற்கு விண்ணப்பதாரர்கள் கட்டுப்படுதல் வேண்டும். அவ்வாறு கட்டுப்படாத அல்லது சட்ட திட்டங்களை மீறுகின்ற பரீட்சார்த்திகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டணைகளுக்கு ஆளாக நேரிடலாம். பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் பரீட்சை ஆணையாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

10 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தலில் ஏதேனும் முரண்பாடு அல்லது பொருத்தமின்மை காணப்படின் அவ்வேளை சிங்கள மொழியில் வெளியிடப்படுகின்ற அறிவித்தலே மேலோங்கிக் காணப்படும் இங்கு குறிப்பிடப்படாத விடயம் ஏதுமிருப்பின் அது தொடர்பில் சுங்கப் பணிப்பாளர் நாயகம் தீர்மானத்தினை மேற்கொள்வார்.

எஸ். பீ. அருக்கொட,
சுங்கப் பணிப்பாளர் நாயகம்.

இலங்கை சுங்கத் திணைக்களம்,
"சுங்க இல்லம்",
இல. 40, பிரதான வீதி,
கொழும்பு 11.

03-182

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*